# September 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் சென்னையில் தொடங்கி வைத்து மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

(i) தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், அவர்கள் பசியின்றி பயில்வதை உறுதி செய்யவும், கல்வியில் முழுமையான கவனம் செலுத்தவும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்பு வரைபயிலும் மாணவர்களுக்கும் காலை உணவு வழங்க முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டார்.

2. 72-ஆவது தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.

(i) 72-ஆவது தேசிய திரைப்பட விருதுகளை, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் அறிவித்தது. கடந்த 2024- ஆம் ஆண்டு வெளியான திரைப்படங்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தமிழ்ப் படங்களுக்கு வெவ்வேறு பிரிவுகளில் மொத்தம் 10 விருதுகள் அறிவிக்கப்பட்டன.

(ii) இதைத் தொடர்ந்து, அந்த விருதுகளை வழங்கும் நிகழ்ச்சி முதல்முறையாக குஜராத்தில் நடைபெற்றது. வழக்கமாக புது தில்லியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி, இந்த முறை குஜராத்தின் நர்மதா மாவட்டம் ஏக்தா நகரில் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு விருதாளர்களுக்கு விருதுகளை அளித்தார்.

(iii) தாதாசாகேப் பால்கே விருது..

- 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய மற்றும் கன்னட திரைத் துறைக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்புக்காக, நடிகர் அனந்த் நாகுக்கு மிக உயரிய தாதாசாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது.

3. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் டி20 கிரிக்கெட்டில் இந்தியா அபார வெற்றியுடன் சாம்பியன் ஆனது. நடப்பு சாம்பியனாக களம் கண்ட இந்தியா, தங்கத்தை தக்கவைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

(i) ஹர்மன்பிரீத் கௌர் தலைமையிலான இந்திய மகளிர் அணி மூலமாக, நடப்பு ஆசியப் போட்டிகளில் தனது முதல் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ள இந்தியா, அதன் மூலமாக பதக்கப் பட்டியலில் 'டாப் 10'-இல் நுழைந்திருக்கிறது.

4. ஐ.நா.பொதுச் சபையில் நடைபெற்ற பன்முகத் தன்மைக்கான முதல் உச்சி

மாநாட்டில் இணைத் தலைமையாக இந்தியா செயல்பட்டது.

(i) ஐ.நா.பொதுச் சபையின் 81- ஆவது ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்க இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்கா சென்றார்.

(ii) இந்நிலையில், ஐ.நா.பொதுச் சபையில் முதல் முறையாக நடைபெற்ற 'பன்முகத்தன்மை, சர்வதேச சட்டம், அமைதி மற்றும் வளமைக்கான (பி4எம்) கூட்டாளிகள்' என்ற உச்சி மாநாட்டில் ஆஸ்திரேலியா, பார்படோஸ், பிரேஸில், கனடா, கென்யா ஆகிய நாட்டின் பிரதிநிதிகள் மற்றும் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் ஆன்டனியோ கோஸ்டா ஆகியோருடன் இணைத் தலைவராகச் செயல்பட்டார்.

(iii) வி4 நாடுகளுடனான சந்திப்பு வரலாற்று மைல்கல்:

- ஹங்கேரி, ஸ்லோவோவோக்கியா, போலந்து, செக் குடியரசு (விசெக்ராட் குழு) ஆகிய 4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் முதல்முறையாக ஜெய்சங்கர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.
- இது குறித்து அவர் கூறுகையில், 'வி4 நாடுகளின் அமைச்சர்களை சந்தித்தது வரலாற்று மைல்கல் நிகழ்வு.
- ஐரோப்பிய ஒன்றியத்துடனான இந்திய நட்புறவு மேலும் விரிவடைந்து வருகிறது.
- தொழில்நுட்பம், புத்தாக்கம், பாதுகாப்பு, விண்வெளி, தொலைத்தொடர்பு உள்ளிட்ட துறைகளில் வி4 நாடுகள் மற்றும் இந்தியா இடையேயான ஒத்துழைப்பு வரும் நாள்களில் வலுப்படும்.
- ஆண்டுதோறும் வி4 நாடுகள் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் சந்திப்பு, வணிக கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது' என்றார்.

5. ராஜஸ்தானில் வரும் 26-ஆம் தேதி தொடங்கும் சர்வதேச விமானப்படை பயிற்சியில் அமெரிக்காவின் அதிநவீன எஃப் 35 விமானம் உள்பட 7 நாடுகளைச் சேர்ந்த விமானங்கள் பங்கேற்கின்றன.

(i) 'தரங் சக்தி' என்ற பெயரில் சர்வதேச விமானப் படை கூட்டுப் பயிற்சி ராஜஸ்தானின் ஜோத்பூர் விமானப் படைதளத்தில் செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 12-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

(ii) இதில் அமெரிக்காவின் ஸ்டெல்த் போர் விமானமான எஃப்35 முதல் முறையாகப் பங்கேற்க உள்ளதாக இந்திய விமானப் படை தெரிவித்தது. அமெரிக்காவின் 5-ஆம் தலைமுறை போர் விமானம் இந்திய வானில் பறப்பதன் மூலம் இந்தக் கூட்டு போர்ப் பயிற்சி சர்வதேச அளவில் மிகவும் கவனிக்கப்படும் விஷயமாக உள்ளது.

(iii) இந்தப் பயிற்சியில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, வங்கதேசம், இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 7 நாடுகள் பங்கேற்கின்றன.

(iv) இந்திய விமானப் படை சார்பில் ரஃபேல், மிராஜ்-2000, ஜாகுவார், தேஜஸ், மிக்-29, சுகோய்-30 எம்கேஐ உள்ளிட்ட பல்வேறு விமானங்கள் பயிற்சியில்

பயன்படுத்தப்படவுள்ளன.

(v) இந்தப் பயிற்சி இந்தியாவின் பாதுகாப்பு, விமானப் படைத் திறனை வெளிப்படுத்துவதுடன், பிற நாடுகளின் விமானப் படைகளுக்கு இடையே செயல்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான தளமாக விளங்குகிறது என்று இந்திய விமானப்படை தெரிவித்தது.

(vi) பிரான்ஸின் ரஃபேல், ஐக்கிய அரபு அமீரகத்தின் எஃப் 16, வங்கதேசத்தின் சி-130ஜே போர் விமானங்கள் ஜோத்பூர் விமானப் படை தள விண்வெளியில் இரண்டு வாரங்களுக்கு பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றன.

(vii) அமெரிக்காவின் எஃப்-35 விமானம் இதற்கு முன் ஏரோ இந்தியா 2025 விமானக் கண்காட்சியில் பங்கேற்றிருந்தாலும், இந்திய மண்ணில் பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.

(viii) இதற்கு முன்பு 'தரங் சக்தி' பயிற்சி முதல்முறையாக 2024-ஆம் ஆண்டு இரு கட்டங்களாக தமிழ்நாட்டின் சூலூர், ராஜஸ்தானின் ஜோத்பூரில் நடைபெற்றன. அதில் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட 11 நாடுகளின் போர் விமானங்கள் பங்கேற்றன.

6. நீர் பாதுகாப்பு என்பது மக்களின் பாதுகாப்புக்கும் தேசத்தின் பாதுகாப்புக்கும் வழிவகுக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(i) தில்லியில் உள்ள பாரத மண்டபத்தில் ஒன்பதாவது இந்திய சர்வதேச தண்ணீர் வார விழாவின் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

- உலக நிலப்பரப்பில் 2.4 சதவீதம் இந்தியாவில் உள்ளது. அதே வேளையில் உலக மக்கள்தொகையில் 18 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். எனினும், உலகின் மொத்த நீர் வளங்களில் 4 சதவீதம் மட்டுமே நம் நாட்டில் உள்ளது.
- பருவநிலை மாற்றம், வேகமான நகரமயமாக்கல் நடவடிக்கைகள், மக்கள்தொகை பெருக்கம் ஆகியவற்றால் நீர் தொடர்பான பிரச்னைகள் மிகவும் சிக்கலாகியுள்ளன.
- மாநிலங்களுக்கு இடையிலான நீர் பகிர்வு தகராறுகள் பெரிய பிரச்னையாக உள்ளன. நாட்டின் சில பகுதிகள் வறட்சியையும் மற்ற பகுதிகள் வெள்ளத்தையும் எதிர் கொண்டுள்ளன.
- பிரதமர் நரேந்திர மோடியின் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் நதிநீர் பகிர்வு தொடர்பாக மாநிலங்களுக்கு இடையில் 10 ஒப்பந்தங்கள் செய்ய கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக கென் பெட்வா மற்றும் கிஷாவ் நீர் பங்கீட்டு ஒப்பந்தங்கள் திகழ்கின்றன. ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட், ராஜஸ்தான், தில்லி, ஹரியாணா மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய 6 மாநிலங்கள் நதி நீர் பங்கீட்டுக்காக ஒப்பந்தங்களைச்

செய்துகொண்டுள்ளன. இது மத்திய நீர் வள அமைச்சகத்தின் மிகப் பெரிய சாதனையாகும்.